**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of civil procedure)**
**IN THE COURT OF SUBORDINATE JUDGE,**
**KEERANUR**
**CASE NO.OS.No.80/2021**
**Deposition of witness of Plaintiff – P.W.2(பிரபு)**
**06.02.2025**

**5ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

1. இவ்வழக்கில் சாட்சி சொல்ல எனக்கு அழைப்பாணை வரவில்லை. வழக்கு விவரங்கள் எனக்கு யார் சொன்னது என்றால் கடந்த வாய்தாவிற்கு வந்தபோது தெரியும்.

2. வாதிகள் சொன்னதன் அடிப்படையில் சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலம் யார் சொல்லி எங்கு வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் வழக்கு தாக்கல் செய்தவர்கள் சொல்லி தயார் செய்யப்பட்டது.

3. நான் இலுப்பூர் தாலுகா, மதியநல்லூரில் வசித்து வருகிறேன். தாவா சொத்துக்கள் குளத்தூர் தாலுகா, மேலூர் கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். மதியநல்லூருக்கும், மேலூருக்கும் நேரடி பேருந்து போக்குவரத்து இல்லை என்றால் சரிதான்.

4. தாவா சொத்துக்களுக்கு அருகில் எனக்கு சொந்தமாக சொத்துக்கள் இல்லை என்றால் சரிதான். வழக்கு பிரதிவாதிகளை நான் பார்த்ததில்லை என்றால் சரிதான்.

5. எத்தனை அயிட்ட சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் அதன் பட்டா எண், சர்வே எண், வகைப்பாடு மற்றும் விஸ்தீர்ணம் தெரியுமா என்றால் தெரியாது. வாதிகள் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள்.

6. பிரதிவாதிகள் வாதிகளின் உறவினர் அல்ல, மூன்றாம் நபர்கள் என்றால் சரிதான். 2 முதல் 5 பிரதிவாதிகளின் தகப்பனாரால் கிரையம் வாங்கப்பட்ட சொத்துக்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

7. எனது நிரூபண வாக்குமூலம் பத்தி 4ல் 1ஆம் பிரதிவாதி மற்றும் உலகநாதன் ஆகியோரின் சகோதரிகள் மாரியம்மாள், அமராவதி ஆகியோருக்கு சொத்தின் உரிமை அந்தஸ்து நீக்கப்பட்டு 60 ஆண்டுகளுக்கு மேலாக தனித்து வாழ்ந்து வருவதாக சொல்லப்பட்டுள்ளது, ஆனால் எனக்கு தற்போது 45 வயது தான் என்றால் சரிதான்.

8. மேற்படி விவரங்களை வாதிகள் சொன்னதன் அடிப்படையில் சொல்லியுள்ளேன் என்றால் மேலூர் கிராம மக்கள் சொன்னதன் அடிப்படையில் சொல்கிறேன். ஊர் மக்கள் சொன்னதாக நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

9. தாவா சொத்து பற்றிய விவரங்கள் எதுவும் எனக்கு நேரடியாக தெரியாது என்றும், ஊர் மக்கள் சொல்லிதான் தெரியும் என்றால் சரிதான். நான் தாவா சொத்துக்கள் சம்மந்தமான ஆவணங்கள் எதையும் பார்க்கவில்லை என்றால் சரிதான்.

10. எனக்கு வழக்கு பற்றியும், தாவா சொத்துக்கள் பற்றியும், பிரதிவாதிகள் பற்றியும் எதுவும் தெரியாது என்றும், வாதிகள் எனக்கு வேண்டியவர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**7, 8 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்பேரில் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in Open Court, read over to the witness and acknowledgedby him and found correct.

ஓம்/–திரு.C.ராஜேஷ்,
சார்பு நீதிபதி,
கீரனூர்.